மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்).

(2) அறிவிப்பு.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப்பேரவையின் உறுப்பினர்களான திரு. எம். ஜி. இராமச்சந்திரன். திரு. சு. ம. துரைராஜ், திரு. முனு ஆதி. திரு. ஜி. ஆர். எட்மண்ட், திரு. கே. காளிமுத்து, திரு. சி. வே. வேலப்பன். திரு. குழ. செல்லையா, திரு. பெ. சௌந்தரபாண்டியன். திரு. துரை கோவிந்தராசன் ஆகியோர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ஒரு கடிதம் எழுதியுள்ளார். இந்த உறுப்பினர்களிடமிருந்தும் கடிதம் வந்திருப்பதால், அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளபடி அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் குறித்து அவைக்கு அறிவிக்கப்படாதது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I am submitting a point of order. I understand questions are going to be taken up now.

MR. SPEAKER : Is the hon. Member raising a point of order?

1972 நவம்பர் 13]

THIRU K. T. K. THANGAMANI : Yes. I am raising a point of order. Before questions are taken up, I would like to raise the point of order.
சென்ற சட்டசபைக் கூட்டம் முடிந்ததற்குப் பின்னால்....

THIRU RAMA ARANGANNAL : Sir, I am raising a point of order . . . . .

MR. SPEAKER : Let the hon. Member (Thiru Thangamani) first finish his point of order.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற சட்டசபைக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால் யார் யார் அமைச்சர்கள் என்று நமக்கு அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு உணவு அமைச்சரும் விவசாய அமைச்சரும் பதில் சொல்வதாக இந்தக் கேள்வித் தாளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்பே ஒரு விவசாய அமைச்சர் ராஜினாமா செய்து, எதற்காக அவர் ராஜினாமா செய்தார் என்ற விஷயங்கள் கூட சபைக்குத் தெரிவிக்கப்படவில்லை. இப்பொழுது மீண்டும் ஒரு விவசாய அமைச்சர் வந்திருப்பதாகத் தெரிகிறது. எனக்கு அவர் விவசாய அமைச்சராகப் போனதினால் வருத்தம் கிடையாது; வந்ததனால் சந்தோஷம் கிடையாது. பொதுவாக, அவர் சென்றதினாலும் சந்தோஷம் கிடையாது. அவர் வந்ததனாலும் வருத்தம் கிடையாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், இன்றைக்குக் கேள்வி கேட்கின்ற போது நாங்கள் உணவு அமைச்சருக்குக் கேள்வி கேட்டால், பழைய உணவு அமைச்சர் பதில் சொல்வாரா என்று எனக்குத் தெளிவாக இல்லை. அதேமாதிரி விவசாயம் சம்பந்தமாகக் கேள்வி கேட்டால் எந்த அமைச்சர் பதில் சொல்வார் என்றும் தெரியவில்லை. சாதாரணமாக எனக்குத் தெரியும்—முதலமைச்சர் அவர்களே தங்களுடைய அமைச்சரவையை மாற்றியமைக்கலாம். சென்ற கூட்டத் தொடரிலோ அதற்கு முன்போ ஏன் ராஜினாமாச் செய்தார் என்பதைப்பற்றி எந்தவிதமான முகாந்திரமும் சொல்லப்படாத நிலையில், முதலமைச்சரிடமிருந்து ஒரு அறிக்கையோ அல்லது அரசின் சார்பாக ஒரு அறிக்கையோ வந்தால்தான் எந்த எந்த அமைச்சரிடத்திலிருந்து எந்த எந்த விஷயத்தைப் பற்றிக் கேள்வி எழுப்புவது என்ற முறை இருக்கும் என்ற காரணத்தால் கேள்வி நேரத்திற்கு முன்னால் இந்தப் பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்புகிறேன். 83-வது விதியின் அடிப்படையில் இந்த நேரத்தில்

எழுப்ப முடியும். ஆகவேதான் கேள்வி நேரத்திற்கு முன்பாக இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன். **I submit this for your decision.**

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களை ஒன்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். நாம் மிகவும் அமைதியாகவும்....

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்பொழுது சபையின் முன் உள்ள விஷயத்தை ஒட்டித்தான் நானும் எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு முடிவு தெரிவிக்கிறேன்.

DR. H. V. HANDE : I am raising a point of order with regard to the admissibility of the question. It is the same point of order but a different point of view.

MR. SPEAKER : I would dispose of the first point of order.

DR. H. V. HANDE : My point of order would be helpful.

MR. SPEAKER : Whether it is helpful or unhelpful, another hon. Member rose on a point of order and I have asked him to resume his seat. I would like to give a chance to Thiru Rama Arangannal and also to Dr. Hande. Now I would dispose of this point of order. I am quite clear about the point of order raised by the hon. Member, Thiru Thangamani.

திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையில், ஒரு அமைச்சர் ராஜினாமா செய்திருக்கிறார், ஒரு அமைச்சர் புதிதாக வந்திருக்கிறார், அமைச்சர் ராஜினாமா செய்ததும் புதிதாக வந்ததும் இந்தச் சபைக்குத் தெரிவிக்கப்படவில்லை, இது ஒழுங்குப் பிரச்சினைக்குள்ளே வருமா என்று கேட்கிறார்.

முதலமைச்சர் அவர்கள்தான் இந்த மன்றத்திற்குப் பொறுப்பானவர்கள். அவர்களுக்கு 'கலெக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடி' இருக்கிறது. அவர்கள் எந்த நேரத்திலும் அமைச்சரை அகற்றலாம்; புதிதாக அமைச்சரை நியமிக்கலாம். நிர்வாக சௌகரியங்களுக்காக யாரையும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அமைச்சராக

1972 நவம்பர் 13] [பேரவைத் தலைவர்]

நியமித்து எந்த இலாக்காப் பொறுப்பையும் கொடுக்கலாம். அமைச்சர் இன்னொரு அமைச்சருக்காகப் பதிலளிக்கலாம். பொதுவாக முதலமைச்சர் இந்த மன்றத்திற்குப் பொறுப்பாளியாவார். ஏனென்றால், இந்த அரசுக்கும், அரசாங்கத்தை நடத்துவதற்கு அல்டிமேட் ரெஸ்பான்சிபலிடி உள்ள முதலமைச்சர்தான் சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர் என்ற வகையில், புதிதாக ஒரு அமைச்சரை நியமிப்பதோ, இன்னொரு அமைச்சரை நீக்குவதோ, அமைச்சர்களுக்குள்ள இலாக்காக்களை மாற்றுவதோ முதலமைச்சர் அவர்களுக்குள்ள உரிமை.

திரு. தங்கமணி அவர்கள் 83-வது விதியைக் குறிப்பிடுகிறார். நான் வேறு விதியைச் சொல்கிறேன். ராஜிநாமா செய்கிற அமைச்சர் காரணங்களைச் சொல்லலாம் என்றுதான் விதி இருக்கிறதே தவிர, காரணங்களைச் சொல்லியாக வேண்டும் என்ற நிலைமை இல்லை. பொதுவாக, அமைச்சர்கள் காரணம் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம் என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

Rule 56 (1) says—

'A member who has resigned the office of Minister may, with the consent of the Speaker, make a personal statement in explanation of his resignation.'

தேவையானல் அவர் காரணம் கொடுக்கலாம் என்றுதான் விதி இருக்கிறதே தவிர, அவரை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. ஆகவே, புதிய அமைச்சர் வந்ததற்கும் முன்பு ராஜிநாமா செய்ததற்கும் காரணம் கொடுத்தாக வேண்டும் என்று நம்முடைய சட்டமன்ற விதிகளின்படி கட்டாயம் இல்லை. அமைச்சர்களை மாற்றுவதும் புதிதாக அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதும் முதலமைச்சரவர்களுக்கு இருக்கும் பிரத்யேக உரிமையாகும். அதை அவைக்குத் தெரிவித்தாலும் தெரிவிக்கலாம்; தெரிவிக்காமலும் இருக்கலாம். ஆனால், இது குறித்து ஒரு மரபை ஏற்படுத்திக் கொள்ளலாம். மக்கள் தெரிந்து கொள்வதற்காக, பொதுவாக அமைச்சர் ராஜிநாமா செய்யும் நோக்கிலோ அல்லது புதிதாக அமைச்சர் வருகிற நோக்கிலோ அதற்கான காரணங்களைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வகையில், புதிய மரபுகளையும் விதிமுறைகளையும் நாம் ஏற்படுத்துவது

நலம் என்று இந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு நான் சொல்லிக் கொண்டு இத்துடன் இதை முடிக்கிறேன்.

(ஆ) வினா-விடை நேரத்தை நிறுத்தி வைத்தல் குறித்து.

(இ) பேரவைத் தலைவர்மீது கொடுக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி உறுப்பினர்களுக்கு முன்னதாக அறிவிக்கப்படாதது குறித்து.

(ஈ) முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றைக் குறித்து முதலமைச்சர் அவைக்கு 82-வது விதியின் கீழ் அறிக்கை அளிக்காதது குறித்து.

(உ) அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றுவது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதா என்பது குறித்து.

(ஊ) வினா நேரத்தை நிறுத்தி வைப்பதற்கான தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றாமல், அந்த நேரத்தில் வேறு பொருள் குறித்து விவாதம் செய்யலாமா என்பது பற்றி.

(எ) தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று அரசுக்கு பேரவைத் தலைவர் ஆலோசனை கூறியது குறித்து.

DR. H. V. HANDE : Sir, I want to raise a different point of order. Now we are in the question-hour. There are precedents when the very question-hour is done away with. Now it is a farcial thing, in my opinion, to have question-hour because there is such a confusion in the Ministry and in the Ruling Party that we do not know whether this Ministry is going to continue for long and we do not know anything about it.

We also hear, I may stand corrected if it is wrong, that a no-confidence motion against the Hon. Speaker from a Member of the Ruling Party had been tabled. From all reports I think the Hon. Speaker belongs to Karunanidhi DMK because he has not yet submitted his resignation from it. It is very curious, funny that a ruling party Member has given notice of a no-confidence motion against the Hon. Speaker. The same Hon. Speaker is sitting now in the Chair. The whole thing is unrealistic. I think it will be farcical to have the question-hour now. Therefore it will be better if we do away with questions and answers and come to serious business. Just as the Hon. Chief Minister said when